# உங்களில் ஒருவன் - உங்களோடு ஒருவன்!

**சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார்**
**இனமான எழுச்சியில் பேரறிஞர் அண்ணா**
**இயக்கத்தை வழி நடத்துவதில் தமிழினத் தலைவர் கலைஞர்**
**மொழி உரிமையில் இனமானப் பேராசிரியர்**
**இந்த நால்வரின் நிழற்குடையில் நிற்பவன் நான்.**
**இவர்கள்தான் என்னைச் செதுக்கிய சிற்பிகள்.**
**மு.க. ஸ்டாலின்**

கி.மு. 2ஆம் நூற்றாண்டு காலத்திலேயே தமிழர்கள் தன்வரலாறு அல்லது சுயசரிதை என்ற இலக்கிய வடிவத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். சங்ககாலப் புலவர்களான பெருஞ்சித்திரனார், கோவூர்கிழார் போன்றவர்கள் கவிதை வடிவில் தங்களுடைய வாழ்க்கைக் கதையினை எழுதியிருக்கிறார்கள். நம்முடைய அகப்பாடல்கள் எல்லாமே ஒருவிதத்தில் தன்வரலாற்றைப் பேசுபவைதான்.

சங்ககாலத்திற்குப் பிறகு தனிமனிதக் கதையை முன்னிலைப்படுத்தாமல், சமூக வரலாற்று ஆவணமாகத் தன்னுடைய நாட்குறிப்பினை, பாண்டிச்சேரியைச் சார்ந்த ஆனந்த ரங்கம் பிள்ளை 1760ஆம் காலகட்டத்திலேயே எழுதியிருக்கிறார். தற்போது தமிழில் கணக்கிட்டால் குறைந்தது 200க்கும் மேற்பட்ட தன்வரலாற்று நூல்கள் இருக்கக் கூடும். 'புலவர் புராணம்', 'விநோத ரசமஞ்சரி', 'தமிழ் நாவல் சரிதை', 'குருபரம்பரை பிரபாவம்', 'சேய் தொண்டர் புராணம்' போன்ற பல நூல்கள் தன்வரலாற்றுக் கதைகளுக்கான முன்னோடிகளாக இருந்தவை. பாரதியாரும்கூட 1910ஆம் ஆண்டில் தன்னுடைய வாழ்க்கைக் கதையை 49 பாடல்களில் பதிவுசெய்துள்ளார்.

வ.உ.சி. 1916 - 1930 காலகட்டத்தில் 'சுயசரிதம்' என்ற நூலை எழுதியிருக்கிறார். 1921-1922இல் ராஜாஜி 'சிறையில் தவம்', 1939இல் ரெட்டைமலை சீனிவாசன், 'ஜீவித சரிதம்', 1940இல் உ.வே.ச., 'என் சரிதம்' என்ற நூல்களையும் எழுதினார்கள். இந்த வரிசையில் திரு.வி.க., நாமக்கல் கவிஞர், பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, ஜெயகாந்தன், கண்ணதாசன், சி. இலக்குவனார், மு.வரதராஜன், ம.பொ.சி. போன்ற பலரும் தங்களுடைய வாழ்க்கைக் கதைகளை எழுதியிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள், 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில் ஆறு பாகங்களாக மொத்தம் 3296 பக்கங்களில் தன்னுடைய வாழ்க்கைக் கதையை எழுதியிருக்கிறார். தன்னுடைய சுயசரிதையை ஆறு பாகங்களாக 3296 பக்கங்களில் எழுதிய ஒரே நபர் உலக அளவில் யார் என்று கேட்டால் அது கலைஞராகத்தான் இருப்பார்.

தன்வரலாற்று நூலை எழுதிப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். நாவல், நாடகம், சிறுகதை, கவிதை மட்டுமல்ல; தன்வரலாறும் இலக்கிய வடிவங்களில் ஒன்றாக உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நெல்சன் மண்டேலா எழுதிய 'Long Walk to Freedom', ஆனி பிராங்க்ளின் எழுதிய 'The Diary of a Young Girl, ஹெலன் கெல்லர் எழுதிய 'The Story of My Life, பூக்கர் டி. வாஷிங்டன் எழுதிய 'Up From Slavery' ஆகிய தன்வரலாற்று நூல்கள் உலகப் புகழ்பெற்றவை.


கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடக ஆசிரியர்கள், அறிவியல் அறிஞர்கள், பொருளாதார மேதைகள், வரலாற்று ஆய்வாளர்கள், சமூகப் போராளிகள் எனப் பலரும் தங்களுடைய தன்வரலாற்றுக் கதைகளை எழுதியிருக்கிறார்கள். அரசியல் கட்சித் தலைவர்களும் எழுதியிருக்கிறார்கள். தன்னுடைய கதையைத் தானே எழுதுவதும், தன்னுடைய கதையைப் பிறரிடம் சொல்லி எழுதவைப்பதும் நடக்கிறது.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் வாழ்க்கை சார்ந்து ஒரு கதை இருக்கும். வாழ்க்கைக் கதை இல்லாத மனிதர் என்று உலகில் ஒருவரையும் காட்ட முடியாது. வாழ்ந்த கதைதான் தன்வரலாறு அல்லது சுயசரிதை என்பது. நினைவுகளை மீட்டெடுத்துத் தொகுத்து எழுதப்படும் வடிவம். நினைவுகள்தான் மனிதர்களை மகிழ்ச்சிகொள்ள, துக்கம்கொள்ளச் செய்கின்றன. ஜோடனை இல்லாமல், மிகையில்லாமல், உண்மையாக எழுதப்படும் தன்வரலாற்று நூல்கள்தான் உலக அளவில் வாசகர்கள் கவனத்தை ஈர்க்கின்றன. உலகில் வாழ்கிற எல்லா மனிதர்களுக்கும் வாழ்க்கைக் கதை இருந்தாலும் எல்லாராலும் எழுதப்படுவதில்லை, எழுதினாலும் உலகம் முழுவதும் கொண்டாடப்படுவதில்லை.

ஒருசில மனிதர்களுடைய தன்வரலாற்று நூல்கள் தான் வாசகர்கள் கவனத்தை ஈர்க்கின்றன. சமூகத்திற்காகப் போராடியவர், தியாகம் செய்தவர், இலக்கியத்தில் பங்களிப்பு செய்தவர்களுடைய சுயசரிதைகள்தான் சமூகத்தால் கொண்டாடப்படுகின்றன. தனி மனிதர்களுடைய கவலைகள், துயரங்கள், வலிகள், இழப்புகள், மேன்மைகள், கண்ணீர்க் கதைகள் போன்றவை பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. ஒரு சிலருடைய தன்வரலாற்று நூல்கள் சமூகத்தால் கொண்டாடப்படவும் செய்கின்றன. அப்துல் கலாம் எழுதிய 'அக்னிச் சிறகுகள்' உலகளவில் பெரும் கவனத்தை ஈர்த்த தன்வரலாற்று நூலாகும்.

**25.6.1975 அன்று நள்ளிரவில் இந்திரா காந்தியால் இந்தியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. இது 18 மாதங்கள் மட்டுமே அமலில் இருந்தது. அவசர நிலை அமல்படுத்தப்பட்டு அரை நூற்றாண்டு காலம் கடந்துள்ள நிலையில், மிசா கைதியாக ஓராண்டு சென்னை மத்தியச் சிறையிலிருந்த மு.க.ஸ்டாலின் எழுதிய 'உங்களில் ஒருவன்' நூல் வெளிவந்திருக்கிறது. மிசாவில் கைது செய்யப்பட்டு, கொடும் தண்டனையை அனுபவித்தவர்களுடைய கதையைப் பேசுவதற்கு, எழுதுவதற்கு, இன்று யார் இருக்கிறார்கள்? 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. தலைமுறை மாறிவிட்டது. ஆனால் வரலாறு மாறாது. வரலாற்றை எழுத வந்திருக்கிறார் ஸ்டாலின். முன்பு வாழ்ந்த வாழ்வின் நினைவு.**

**தனது 23 வயதிற்குட்பட்ட வாழ்க்கைக் கதையை, 'என் உயிரினும் மேலான தலைவரப்பா', 'உள்ளே வெளியே', 'கல்வியா அரசியலா', 'முரசே முழங்கு', 'வீடும் கல்லூரியும்', 'மெல்லத் திறந்தது சிறைக்கதவு', 'அவசர நிலைக் காலத்தின் தொடக்கம்', 'சலூன் நாற்காலியில் சுழன்றபடி' என்று 27 தலைப்புகளில் எழுதியிருக்கிறார். இந்நூல் அவர் 5 மாதக் கருவாக இருந்த காலத்திலிருந்து 23 வயதில் மிசா கைதியாக, சென்னை மத்தியச் சிறைச்சாலையின் கதவுக்கு முன் நின்றுகொண்டிருந்த தருணம் வரையிலான வரலாற்றைக் கொண்டது.**




'உங்களில் ஒருவன்' படிப்பவர்களுக்கு, இந்த நூல் ஸ்டாலின் என்ற தனிமனிதனுடைய தனிப்பட்ட சந்தோஷங்களை, துக்கங்களை, இழப்புகளை, பெருமிதங்களை மட்டுமல்ல; தி.மு.க. என்ற மாபெரும் இயக்கத்தின் 23 ஆண்டுகால வரலாற்றினைப் பேசும் நூல் என்பது தெரியவரும். அக்காலத்தில் தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் நடந்த அரசியல் நிகழ்வுகள், சமூக நிகழ்வுகள் என்ன என்பதை இந்த நூலின் மூலம் அறிய முடியும். இது ஒரு சமூக வரலாறும், அரசியல் வரலாறும் ஆகும். வெறும் நினைவுப் பதிவு மட்டும் அல்ல.

1953 முதல் 1976ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டு, இந்திய நாட்டு அரசியலில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. தி.மு.க. ஆட்சிக்கு வந்தது; அண்ணா முதலமைச்சர் ஆகிறார். எதிர்பாராதவிதமாக அண்ணா மறைந்துவிடுகிறார். கலைஞர் முதலமைச்சராகிறார். அறுதிப் பெரும்பான்மையுடன் தி.மு.க. கலைஞர் தலைமையில் இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வருகிறது. கலைஞருக்கு உயிர்த் தோழனாக இருந்த எம்.ஜி.ஆர். கட்சியை விட்டு விலகுகிறார். "இதயக் கனியை வண்டு துளைத்துவிட்டது" என்று கலைஞர் எழுதுகிறார். இந்திராகாந்தி அவசர நிலையை அறிவிக்கிறார். கலைஞர் கைது செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஸ்டாலின் கைது செய்யப்படுகிறார். ஸ்டாலின், எல்லாவற்றையும் ஒரு வரலாற்று ஆய்வாளன்போல் பார்வையாளராகவும் பங்கேற்பாளராகவும் இருந்து 'உங்களில் ஒருவன்' என்ற நூலை எழுதியிருக்கிறார்.

ஓராண்டு சிறைத் தண்டனையை அனுபவிக்க, கலைஞர் திருச்சி மத்தியச் சிறைசாலைக்குச் செல்லும்போது தாயின் வயிற்றில் ஸ்டாலின் ஐந்து மாதக் கருவாக இருக்கிறார். பிறந்து நான்கரை மாதக் குழந்தையாக திருச்சி மத்தியச் சிறைச்சாலைக்குச் செல்கிறார். அப்போது கலைஞர் சிறைச் சாலைக்குள் இருக்கிறார். ஸ்டாலின் கைக்குழந்தையாகச் சிறைக்கு வெளியே இருக்கிறார் - இதுவே 'உள்ளே - வெளியே' என்ற தலைப்பின் பின்னணி. அதேபோல், கலைஞர் சிறையில் இருக்கும்போது ஸ்டாலின் பிறக்கிறார். மிசா கைதியாக ஸ்டாலின் சிறையில் இருக்கும்போது உதயநிதி பிறக்கிறார். 1977இல் உதயநிதி பிறந்த செய்தியைக் கடிதம் மூலம் கலைஞர்தான் ஸ்டாலினுக்குத் தகவல் தருகிறார். இப்படியான விநோதமான நிகழ்ச்சி உலகில் வேறு எந்தக் குடும்பத்திலாவது நடந்திருக்குமா?

ஸ்டாலினுக்கு 2 வயது இருக்கும்போதுதான் கலைஞருடைய குடும்பம் கோபாலபுரம் வீட்டிற்கு வருகிறது. அந்த வீடு அண்ணா, எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் மட்டுமல்ல; அரசியல் கட்சித் தலைவர்கள், திரைத்துறையினர், இலக்கியவாதிகள் என்று பலரும் அன்றாடம் வந்துபோகிற இடமாக இருந்தது. இப்படிப்பட்ட சூழலில் வளர்ந்த குழந்தை எப்படி இருக்கும்? ஒருவிதத்தில் தி.மு.க. என்ற இயக்கத்தால் வளர்க்கப்பட்டு, உருவாக்கப்பட்டவர்தான் ஸ்டாலின்.

**ஸ்டாலினுக்குப் பெயர் வைத்த மாதிரி உலகில் எந்தத் தந்தையும் தன்னுடைய குழந்தைக்குப் பெயர் வைத்திருக்க மாட்டார். ரஷ்ய அதிபர் ஜோசப் ஸ்டாலின் மறைவுக்காக சென்னை மெரினா கடற்கரையில் இரங்கல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த இரங்கல் கூட்டத்தில் பேசிய கலைஞர், 'என் மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டுகிறேன்' என்று அறிவித்தார். நான்கரை மாதக் குழந்தையாகத் தந்தையைக் காண சிறைச்சாலைக்குச் சென்ற அதிசயமும், ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்த இரங்கல் கூட்டத்தில், மெரினா கடற்கரையில் பெயர் சூட்டப்பட்ட அதிசயமும், பெயருக்காகப் பள்ளியில் சேர்க்கை மறுக்கப்பட்ட அதிசயமும் ஸ்டாலினுக்குத்தான் நிகழ்ந்துள்ளது.**

**'ஸ்டாலின்' என்ற பெயர் கம்யூனிஸ்ட் பெயராக இருக்கிறது. ஆகவே பள்ளியில் சேர்க்க முடியாது என்று தலைமை ஆசிரியர் மறுத்துவிட்டதை, மாறன் கலைஞரிடம் கூறினார். விஷயத்தைக் கேட்டு கோபமடைந்த கலைஞர், "பள்ளியை மாற்றுவேனே தவிர, பெயரை மாற்ற மாட்டேன்" என்று உறுதியாகக் கூறிவிடுகிறார்.**

**பிறந்ததிலிருந்து தந்தை இறக்கும்வரை ஒருமுறை கூடத் தன் தந்தையை, 'அப்பா' என்று அழைக்காத மகனாகவும், தந்தை இறந்த பிறகு, 'அப்பா' என்று ஒருமுறை அழைத்துக்கொள்ளட்டுமா தலைவரே?" என்று கேட்கும் மகனாகவும் ஸ்டாலின் இருந்தது, அதிசயம்தான். இப்படியொரு மகன் உலகில் ஸ்டாலினைத் தவிர வேறு யார் இருப்பார்கள்?**

திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்கு வரும்போது, தாய் வீட்டைப் பிரிகிறோமே என்று கண்கலங்கி நின்ற மனைவியிடம் ஸ்டாலின் சொன்ன வார்த்தை: "அழு... அழுவதற்கு இன்னும் நிறைய இருக்கிறது, நன்றாக அழு" என்பதுதான். தாலி கட்டிய அன்றே தன் மனைவியிடம் இப்படியொரு வார்த்தையைச் சொன்ன கணவன் ஸ்டாலினைத் தவிர உலகில் வேறு யாராவது இருக்க முடியுமா?

'உங்களில் ஒருவன்' என்ற தன்னுடைய தன்வரலாற்றில் எவ்வளவு துயரமான, கொடூரமான விஷயங்களைச் சொன்னாலும் அதை ஆர்ப்பாட்டமில்லாமல் சொல்கிறார். தனக்கு நடந்ததை வேறு யாருக்கோ நடந்ததுபோல் சொல்கிறார். தன்னுடைய கதைதான் என்றாலும் அதை விலகி நின்று பார்க்கிறார். இந்தப் பார்வை புதிது. அரிது. உணர்ச்சிவசப்படக்கூடிய இடங்களில்கூட நிதானமாக இருக்கிறார். கொந்தளிப்பான தருணங்களில்கூட அமைதியைப் பேணுகிறார். நிதானம், பொறுமை, சகிப்புத்தன்மை, இவையே ஸ்டாலினின் சொத்துகள்.

ஸ்டாலின் என்று சொல்ல வராமல் 'தாலின்' என்று அழைத்த அஞ்சுகம் அம்மையாரைப் பற்றி எழுதும்போது மட்டும்தான் ஸ்டாலின் உணர்ச்சி வசப்பட்டிருக்கிறார். 'இந்தப் புத்தகத்தில் நான் அதிகமாகத் தெரிகிறேனா, அவர் அதிகமாகத் தெரிகிறாரா? நாங்கள் இருவரும் இருக்கிறோம்... அவரின்றி நானில்லை" (பக். 9) என்று கலைஞரைப் பற்றி எழுதினாலும், அஞ்சுகம் அம்மையாரைப் பற்றி ஒரு நூல் கூடத்தான் எழுதியிருக்கிறார். "அம்மா தாயே. உன் ஸ்டாலின் உன்னை வணங்குகிறேன்... இதமான உனது சேலையின் முந்தானையைத் தா ஆத்தா" (பக். 52) என்று எழுதியிருக்கிறார். ஸ்டாலினின் மனதில் அஞ்சுகம் அம்மையாருக்குத் தனித்த இடமுண்டு.

அண்ணா, எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன், நாவலர் நெடுஞ்செழியன், சத்தியவாணிமுத்து, என்.வி. நடராஜன், இளமுருகு பொற்செல்வி போன்றவர்கள் அஞ்சுகம் அம்மையாரைப் பற்றிப் பேசியதை, எழுதியதையெல்லாம் மேற்கோள் காட்டியிருக்கிறார். இவற்றிலிருந்து அஞ்சுகம் அம்மையார் நாட்டு நடப்புகளைத் தெரிந்துகொள்கிற, அதைப் பற்றி விவாதிக்கிற, கட்சி விஷயங்களில் ஆர்வம் காட்டுகிற ஒரு பெண்ணாக இருந்திருக்கிறார். அந்தக் காலத்தில் இப்படியொரு பெண் இருந்தது வியப்புக்குரியது. அஞ்சுகம் அம்மையார் இறந்தபோது, கலைஞரின் மனநிலை, குடும்பத்தாரின் மனநிலை என்னவாக இருந்தது என்பதையும் எழுதியிருக்கிறார். துயரத்தைக்கூட கண்ணீரின்றிச் சொல்லும் பக்குவத்தை அவர் பெற்றிருக்கிறார் என்பதை இந்த நூலைப் படிப்பவர்கள் உணர்வார்கள். **"காகித ஓடம் கடல் அலைமீது, போவது போல, மூவரும் போவோம்"** என்ற திரைப்படப் பாடலை கலைஞர் எழுதும்போது, அவருடைய மனதில் நிறைந்திருந்தது அஞ்சுகம் அம்மையார்தான்.

நாம் ஒரு விதையை ஊன்றலாம், ஆனால் அது எப்படித் துளிர்க்க வேண்டும், வளர வேண்டும் என்று நிர்ணயிக்க முடியாது. அதுபோல, ஒரு மரக்கிளையை ஊன்றலாம். ஆனால் அது எப்படிப் பூக்க வேண்டும், காய்க்க வேண்டும் என்று கட்டுப்படுத்த முடியாது. ஒரு செடியோ, மரமோ அது தன்னியல்பில்தான் வளரும் என்பதற்கு ஸ்டாலின் ஒரு உதாரணம்.

"படிப்பில் கவனம் செலுத்து" என்று கலைஞர், அண்ணா, எம்.ஜி.ஆர்., சிவாஜி கணேசன் போன்றோர் பலமுறை வற்புறுத்தினார்கள். "நான் உன் பாட்டியின் கையால் சாப்பிட்டவன் என்ற முறையில் சொல்கிறேன்" என்று எம்.ஜி.ஆர். சொல்கிறார். ஸ்டாலினுக்கும் படிக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், அவருடைய மனம் அரசியலை நோக்கியே வளர்கிறது, சூரியனை நோக்கும் தாவரம் போல. படிப்பு விஷயத்தில் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். மற்றுமுள்ள இரண்டாம் கட்டத் தலைவர்களுடைய பேச்சை மௌனமாகக் கேட்டுக் கொண்டாலும், தன்னுடைய B.A. பட்டப் படிப்பிற்கான தேர்வை சிறையில் இருக்கும் காலத்தில்தான் எழுதி முடித்தார்.

எழுத்தாளர்
**இமையம்**



**1971இல் கோவையில் நடந்த மாணவர் மாநாட்டில் ஸ்டாலின் பேசும்போது, "மாணவர் பட்டாளத்தில் என்னையும் சேர்த்துக்கொள்கிற வாய்ப்பினை நீங்கள் எனக்கு உருவாக்கித் தர வேண்டும். அது எந்தத் தியாகத்தின் பட்டியலாக இருந்தாலும் அதிலே என்னையும் சேர்த்துக்கொள்வதற்கு ஆணையிட வேண்டும். எத்தகைய தியாகத்தையும் செய்வதற்கு நான் தயார்" (பக்.195) என்று உரையாற்றினார்.**

இனத்திற்காக, மொழிக்காக நான் தியாகம் செய்யத் தயார் என்று பேசிய வார்த்தைகள் வெறும் மேடைப் பேச்சோ, முழக்கமோ, உணர்ச்சிப் பெருக்கில் பேசியதோ அல்ல; மனதின் ஆழத்திலிருந்து வந்தவை. நான் வக்கிலாகப் போகிறேன், கலெக்டராகப் போகிறேன், இஞ்ஜினியர், மருத்துவராகப் போகிறேன் என்று சொல்வதற்குப் பதிலாக, "நான் நாட்டிற்காக, இனத்திற்காக, மொழிக்காக எத்தகைய தியாகத்தையும் செய்வதற்குத் தயார்" என்று அறிவிக்கிற துணிச்சலை 1971லேயே ஸ்டாலின் பெற்றிருக்கிறார். ஸ்டாலின் குரோட்டன்ஸ் செடி அல்ல; ஆலமரம். சமூகப் போராளிகள், அரசியல் கட்சித் தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை, உற்பத்திச் செய்யப்படுவதில்லை; தானாகவே உருவாகுகிறார்கள், காட்டில் வளரும் மரத்தைப் போல, காட்டில் மலரும் பூவைப் போல. அப்படி மலர்ந்தவர்தான் ஸ்டாலின். அரசியலில் தன்னை பலி கொடுக்க வந்தவர். "என்னை உறுதிக்கொண்டவனாகவும், இலட்சியப்பற்றுக் கொண்டவனாகவும் மாற்றியது கோவை மாநாடுதான்" (பக். 316) என்று அவரே எழுதியிருக்கிறார்.

திருவாரூரிலிருந்து சென்னைக்குக் குடிபெயர்ந்த கலைஞருடைய குடும்பம், முதலில் தி.நகர் திருமலைப் பிள்ளை சாலைக்கு அருகிலுள்ள திருமூர்த்தித் தெருவில் தான் வசிக்கத் தொடங்குகிறது. அதன் பிறகு கோடம்பாக்கம் ஜக்காரியா காலனி, பிறகு இராயப்பேட்டை அய்யா முதலித் தெரு, மீண்டும் தி.நகர் ராஜம்பாள் தெரு என இடம் மாறுகிறார்கள். 1955இல்தான் கோபாலபுரம் வீட்டிற்குச் செல்கிறார்கள். இவை எல்லாமே புதுத் தகவல்கள். உலகம் அறியாதது. கலைஞரும், அவருடைய குடும்பமும் வாழ்ந்த வீடு பற்றி நாம் ஒருவிதமாகப் புரிந்து கொண்டிருந்தால், ஸ்டாலின் வேறு விதமாகப் பார்க்கிறார்.

தமிழ்நாட்டின் நிரந்தரமான அரச சபை, திராவிட இயக்கத்தின் திருச்சபை, திரையுலகக் கலைஞர்களுக்குக் கலைச் சபை, இலக்கியவாதிகளுக்குச் சிந்தனை சபை, மொத்தத்தில் எங்களது உயிர்ச் சபை அது" (பக். 78) என்று ஸ்டாலின் எழுதியிருக்கிறார். அதோடு, "கோபால புரம் என்ற வீட்டில் அல்ல, கொள்கைக் கூட்டில் வளர்ந்தவன் நான்" (பக். 8) என்றும் எழுதியிருக்கிறார். கலைஞருடைய கோபாலபுரம் வீடு என்பது தமிழ்நாட்டின் அடையாளங்களில் ஒன்றாக இருக்கிறது, காலத்தால் அழியாத வரலாற்றுச் சின்னம்.

தன்னுடைய பள்ளி, கல்லூரி நாட்களில் தனக்கு நண்பர்களாக இருந்த பலரைப் பற்றியும் எழுதியிருக்கிறார். கல்லூரி நாட்களில் அவருக்கு அணுக்கமாக இருந்தவர் அன்பில் பொய்யாமொழி. அவருடைய மறைவு மனதில் ஆறாத காயமாக இருக்கிறது என்பதை எழுதியிருக்கிறார். தனக்கும் பொய்யாமொழிக்குமான நட்பைப் பற்றி எழுதும்போது, கலைஞருக்கும் அன்பில் தர்மலிங்கத்திற்குமான நட்பைப் பற்றியும் எழுதியிருக்கிறார்.

கலைஞருக்கும் அன்பில் தர்மலிங்கத்திற்குமான உறவு காதலன், காதலிக்குமுள்ள அன்பைப் போன்றது. கணவனுக்கும் மனைவிக்குமான பாசத்தைப் போன்றது. அதே நேரத்தில் இருவருக்கும் முரண்பாடு களும் உண்டு. மோதல்களும், பிணக்குகளும் உண்டு. ஆனாலும் அந்த உறவில் ஒருநாளும் விரிசல் ஏற்பட்டதில்லை. கலைஞருக்கும் அன்பிலுக்குமான உறவுப் பற்றிப் பேசும்போது, 'கணவன் மனைவி சண்டை' என்று பேராசிரியர் குறிப்பிட்டதை மேற்கோள் காட்டியிருக்கிறார். அன்பும் சண்டையும் கலந்த உறவுதானே கணவன் மனைவி உறவு.

**'உங்களில் ஒருவன்' நூலில் தன்னைப் பற்றி மட்டுமே ஸ்டாலின் எழுதவில்லை. அப்படி எழுதியிருந்தால் பன்முக வாசிப்புக்கு இடம் தராத ஒற்றைப் பரிணாமம் கொண்டதாக மாறியிருக்கும். பல மனிதர்களுடைய வாழ்க்கைக் கதைகளையும் இணைத்துக் கூறியிருப்பதால் இந்த நூல் கூடுதல் கவனம் பெறுகிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா, உலகம் முழுவதும் எழுதப்பட்டிருக்கிற தன்வரலாறுகள் முதன்மையாகப் பேசுவது, தனிமனித இழப்புகளை, துயரங்களை அதனால் ஏற்பட்ட வலிகளை மட்டுமே. ஆனால், கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி'யும், ஸ்டாலினின் 'உங்களில் ஒருவ'னும் முற்றிலும் வேறுபட்டவை. தனிமனித வாழ்க்கைக் கதையைப் பின்னிலைப் படுத்தி, பொது வாழ்க்கையை, சமூக வாழ்க்கையை முன்னிலைப்படுத்தி இருவரும் எழுதியிருக்கிறார்கள்.**

தமிழிலும் உலக அளவிலும் எழுதப்பட்ட பல தன்வரலாற்று நூல்களைப் படித்திருக்கிறேன். அவற்றில் தன்னைத் தானே பகடி செய்துகொண்ட தன்வரலாறு ஸ்டாலினுடையது மட்டும்தான். சிறு வயதிலிருந்தே தலைமுடியைப் பேணுதல், சீவுதல் ஆகியவற்றில் அக்கறை கொண்டவராக இருந்திருக்கிறார். அவருடைய இளமைக் கால நிழற்படங்களைப் பார்த்தாலே அது தெரியும். ஒரு முறை வீட்டிற்கு வந்திருந்த சிவாஜி கணேசன், ஸ்டாலினின் தலை சீவலைப் பார்த்துவிட்டு, தலை முடியை இழுத்து, "என்ன தஞ்சாவூர் கோபுரம் மாதிரி இருக்கே!" (பக். 148) என்று கேட்டு கிண்டலடித்துச் சிரித்ததை மறைக்காமல் எழுதியிருக்கிறார். அவரால் மறைத்து எழுதியிருக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. 'உங்களில் ஒருவன்' உண்மையின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று. எழுத்துக்கும், இலக்கியத்துக்கும், எழுத்தாளனுக்கும் அடிப்படைப் பண்பாக இருப்பது உண்மை மட்டுமே.

ஸ்டாலினுடைய வாழ்க்கையில் பலர் வந்தும் போயும் உள்ளனர். ஒவ்வொருவருக்கும் தன் மனதில் தனித்த இடம் தந்திருந்தாலும், முரசொலி மாறனுக்கும், முரசொலி செல்வத்துக்கும் அவர் அளித்த இடம் தனித்துவமானது. கலைஞர் கட்சிப் பணிக்காக வெளியூர் போயிருக்கும் போதெல்லாம், சிறையில் இருந்தபோதெல்லாம், குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் முரசொலி மாறன்தான். ஒருவிதத்தில் கலைஞருடைய பிள்ளைகளை வளர்த்தவர் என்று சொல்வது மிகையாகாது.

**முரசொலி செல்வம் மறைந்தபோது, ஸ்டாலின் நடந்துகொண்ட விதம் செல்வத்தின் மீது அவர் எவ்வளவு பற்றுக்கொண்டிருந்தார் என்பதை உலகம் அறிந்தது. மாமன்கள் என்ற முறை இருந்தாலும் கடைசிவரை முரசொலி மாறனையும், முரசொலி செல்வத்தையும் அவர் 'அண்ணன்' என்றுதான் அழைத்திருக்கிறார். வயதில் மூத்தவராக இருந்தால் 'அண்ணன்' என்று அழைப்பதும், இளையவராக இருந்தால் 'தம்பி' என்று அழைக்கும் மரபு தி.மு.க. உருவாக்கிய பண்பாடு. அந்தப் பண்பாட்டில் வளர்ந்தவர்தானே ஸ்டாலின். தந்தையை, 'தலைவர்' என்று அழைத்ததுபோல, மாமன்களை, 'அண்ணன்' என்றே கடைசிவரை அழைத்திருக்கிறார்.**

தன்னுடைய திருமணத்தைத் தானே தலைமையேற்று நடத்திக்கொண்ட ஒரு மாப்பிள்ளையை உலகம் கண்டிருக்கிறதா? ஆம். கண்டிருக்கிறது. அவர்தான் கலைஞர். 1948இல் கலைஞருக்கும் தயாளு அம்மாவுக்கும் திருமணம் நடக்கிறது. திருமணத்தின் போது, 'சங்க இலக்கியத்தில் காதல் தலைவன், காதல் தலைவி என்று படித்திருக்கிறோம். இந்த மணவிழாவிலும் நானும் என் மனைவியும்தான் தலைவனும் தலைவியும். இப்போது நாங்கள் மாலை மாற்றிக்கொள்கிறோம்' (பக். 86) என்று கூறி மாலை மாற்றிக்கொண்டார்கள். எந்நேரத்திலும் இலக்கியம் பேசக்கூடியவர், எத்தகைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கொள்கை மாறாதவர், எந்த நேரத்திலும் போராடத் தயாராக இருப்பவர் கலைஞர் என்பது எல்லாரும் அறிந்ததுதான்.

தொடர்ச்சி நாளை